# அறிஞர் எம்.சி.சித்திலெப்பை, அறிஞர் செய்யது முஹம்மது அப்துஹு ஆகியோரது கல்விச் சீர்திருத்தச் சிந்தனைகளும், இலங்கையில் இன்றைய சூழலுக்கான பொருத்தப்பாடும்.

எம்.ரி.எம். றிஸ்வி,
இஸ்லாமிய கற்கைகள் நெறித் துறை
கிழக்குப் பல்கலைக் கழகம்

## அறிமுகம்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்தே மத்திய கிழக்கும், மற்றும் பல நாடுகளும் பிரிட்டன், பிரான்ஸ் முதலாம் ஐரோப்பிய நாடுகளின் காலனித்துவத்திற்கு உட்பட்டன. 1875 இல் சுயஸ் கால்வாயின் பெரும் பகுதிகளை விலைக்கு வாங்கியதிலிருந்து பிரிட்டனின் ஆதிக்கம் எகிப்தில் வலுவடைந்தது. இதனால் பிரித்தானியாவின் விருப்பு, வெறுப்புகளுக்கு இணங்க எகிப்திய அரசின் நடவடிக்கைகள் அமையவேண்டியதாயிற்று. துருக்கியும் பலமிழந்து நோயாளி போலானது. முஸ்லிம் ஆட்சியாளர்களிடமிருந்து இந்தியாவையும் பிரித்தானியா எடுத்துக்கொண்டது. அது மட்டுமன்றி இலங்கையையும் தனதாக்கிக் கொண்டது.

இதனால் ஏகாதிபத்தியத்திறகு எதிரான உணர்வுகள் முஸ்லிம் உலகெங்கும் துளிர்த்தன. காலனித்துவத்தால் முஸ்லிம் உலகில் ஏற்பட்ட இஸ்லாத்திற்கு முரணான அரசியல், பொருளாதாரம், கல்வி, கலாசாரம், சமயம் தொடர்பான சிந்தனைகளைக் களைய சிறந்த இஸ்லாமிய சிந்தனையாளர்களும், சீர்திருத்த வாதிகளும் தோன்றத் தொடங்கினர்.

இந்த வகையில் ஆப்கானில் பிறந்து எகிப்தில் தனது போராட்டத்தை முன்னெடுத்துச் சென்றவரான ஜமாலுதீன் ஆப்கானி (1835 – 1898), இந்திய நாட்டவரான சேர் செய்யது அஹ்மதுகான் (1817 – 1898), இலங்கையரான எம்.சி.சித்திலெப்பை (1838 – 1898), எகிப்தியரான முகம்மது அப்துஹு (1849 – 1905) இவர்களின் சீர்திருத்தச் சிந்தனை முயற்சிகள் ஆசியக் கண்டத்து முஸ்லிம்களின் வரலாற்றில் மறக்க முடியாத ஒன்றாகும். இந்நால்வருள் முதல் மூவரும் மரணித்து சுமார் ஏழு ஆண்டுகள் கழித்தே முகம்மது அப்துஹு மரணித்தாலும் இந் நான்கு பேர்களும் சமகாலத்தவர்களாவர்.

இந்நால்வருள் ஜமாலுத்தீன் ஆப்கானியின் பணிகள் மத்திய கிழக்கு முஸ்லிம் நாடுகளைக் கருத்திற் கொண்டும், "சர்வதேசிய இஸ்லாமியம்" என்ற பரந்ததோர் இலக்கை மையமாகக் கொண்டும் மேற்கொள்ளப்பட்டன. மற்றைய மூவரும் தத்தம் தேசிய மட்டத்தில் சமய, சமூக சீர்திருத்தப்பணிகளை மேற்கொண்டனர். இந்நால்வரும் சமகாலத்தவராயினும் பின்னைய மூவரது பணிகளில் பெருமளவு ஒருமுகப்பாடு தென்படுவதால் அம் மூவருள் எம்.சி.சித்திலெப்பை, முஹம்மது அப்துஹு இருவரது சீர்திருத்தச் சிந்தனைகள் பற்றி மாத்திரம், குறிப்பாக அவ்விருவரும் முன்வைத்த கல்விச் சிநதனைகளை மாத்திரம் ஒப்பு நோக்கி ஆராய்வதும், தற்கால இலங்கையின் சூழலுக்கு அச்சிந்தனைகள் எவ்வாறு பொருந்திச் செல்கின்றது என்று விளக்குவதுமே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

தனித்தனி சுதந்திர நாடுகளாகக் காணப்பட்ட எகிப்தும், இலங்கையும் 19ம் நூற்றாண்டில் பிரித்தானியாவின் காலனித்துவ நாடுகளாயின. 1818 களில் இலங்கையிலும், 1882 காலப்பகுதியில் எகிப்திலும், இடம் பெற்ற விடுதலைப் போராட்டத்தை பிரித்தானியர் நசுக்கி இரு நாடுகளையும் முழுமையாக தமதாதிக்கத்தினுள் கொண்டு வந்தனர். எகிப்து 1922 பெப்ரவரியிலும், இலங்கை

1948 பெப்ரவரியிலும் சுதந்திரத்தை அடையும் வரை அவை பிரித்தானியாவின் கீழ் சிக்கித் தவித்தன.

இராணுவ பலத்தைக் கொண்டு கைப்பற்றிய இவ்விரு நாடுகளினதும் பொருளாதாரத்தையும், அதன் வளங்களையும் சுரண்டுவதற்குப் பிரித்தானியர் நடவடிக்கைகளை மேற்கொண்டனர். எகிப்தில் உள்நாட்டுத் தலைவர்கள் பெயரளவில் ஆட்சி செய்தாலும் பிரித்தானியரின் ஆதிக்கமே அங்கு நிலைத்திருந்தது. ஆங்கிலத்தை அரச கரும மொழியாக்கி தமக்கு சார்பாக செயற்பட பயிற்றுவிக்கப்பட்ட ஆங்கிலம் கற்ற சுதேசிகளை இவ்விரு நாடுகளிலும் அரச பதவிகளில் அமர்த்தினர். மேலும் ஐரோப்பியக் கலாசாரத்தை கண்ணியப்படுத்தும் மனோபாவத்தை உருவாக்கக் கூடியதும், கிறிஸ்தவ மயமாக்கலை இலக்காகக் கொண்டதுமான கல்வித் திட்டத்தை அமுல் நடத்தினர்.

1882 இல் எகிப்தில் நடைபெற்ற சுதந்திரப் போராட்டக் கர்த்தாக்களில் ஒருவரான ஒராபி பாஷா இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டார். முஹம்மது அப்துஹ்"வும் நாடு கடத்தப்பட்டு பேரூத்தில் குடியேறினார். இக்கால கட்டத்தில் ஜமால்தீன் ஆப்கானி பிரான்சில் இருந்தார். ஒராபிபாஷாவின் தொடர்பு எம்.சி. சித்திலெப்பைக்குக் கிடைத்ததால் எகிப்தின் முகம்மது அப்துஹ்" ஜமால்தீன் ஆப்கானி இவர்களின் சிந்தனைகளை அவர் மூலம் அறிஞர் சித்திலெப்பை அறிந்திருந்தார்.

ஐரோப்பாவில் ஒருவகை எழுச்சியும், ஆசியாவில் ஒருவகை வீழ்ச்சியும் காணப்பட்ட காலமாக 19 ஆம் நூற்றாண்டின் பிற்காலப்பகுதி காணப்பட்டது. அரபு நாடுகள் எல்லாவகையிலும் தனிமைப்படுத்தப் பட்டிருந்தன. வெறும் செல்வாக்கு மாத்திரமே அங்கு இருந்தது. அதே வேளை அவை சகல துறைகளிலும் பின்தங்கியே இருந்தன.

எகிப்து ஐரோப்பியரின் காலனித்துவத்தின் கீழ் தனது அரசியல் சுதந்திரத்தை இழந்து கல்வி, கலாசாரம், பொருளாதாரம், சமய நம்பிக்கைகள் அனைத்திலும் பாரிய அச்சுறுத்தல்களை எதிர் நோக்கியது. ஐரோப்பியர் இங்கு தமது மிஷனெறிப் பாடசாலைகளை ஏற்படுத்தினர்.

ஐரோப்பியரின் காலனித்துவத்தின் மூலம் எகிப்து, இலங்கை மாத்திரமல்ல உலக முஸ்லிம் நாடுகள் அனைத்துமே கிழ்வரும் விளைவுகளைச் சந்தித்தன.

1. சுதந்திரத்தை இழந்தமை 2. இஸ்லாமிய ஷரீஆ உதாசீனம் செய்யப்பட்டமை.
3. இஸ்லாமியக் கல்வி புறக்கணிக்கப்பட்டு மேற்குக் கல்வி புகுந்தமை
4. சமூக முதன்மை, மார்க்கக் கல்வி படித்தவர்களுக்கன்றி, மேற்குக் கல்வி படித்தவர்களுக்கு கொடுக்கப்பட்டமை. 5. தேசியவாதச் சிநதனை வலுப்பெற்றமை.

கைத்தொழில் புரட்சி ஐரோப்பாவிற்குப் பெற்றுக் கொடுத்திருந்த வியக்கத்தக்க தொழில்நுட்பச் சாதனங்கள், இராணுவச் சாதனைகள், புதிய வாழ்க்கைமுறை போன்றவற்றை எப்படி எதிர்கொள்வது என்பதில் ஐரோப்பிய ஆதிக்கத்திற்குட்பட்டிருந்த நாடுகளில் வாழ்ந்த முஸ்லிம் சிந்தனையாளர்கள் கருத்து முரண்பட்டுக்கொண்டிருந்தனர்.

ஒரு குழுவினர் – தமது மரபு ரீதியான சிந்தனைப் போக்கை பேணுவதன் ஊடாகவே ஐரோப்பியர்களின் அச்சுறுத்தல்களை எதிர் கொள்ள முடியும் என்று கருதிக் கொண்டிருந்தனர். மற்றொரு குழுவினர் – ஐரோப்பாவின் சமய சார்பற்ற சிந்தனைப் போக்கினையும், தாராளக் கோட்பாட்டையும் தாமும் பின்பற்றுவதே சரி என்று கருதிக் கொண்டிருந்தனர்.

அடுத்த குழுவினர் – முஸ்லிம்களிடையே சமூக சீர்திருத்தத்தை ஏற்படுத்த சிறந்த சீர்திருத்த சிந்தனைகளை முன்வைக்க வேண்டும் என்று சிந்தித்தனர். இப் பின்னைய குழுவையே அறிஞர் சித்திலெப்பையும், செய்யத் முகம்மது அப்துஹ்"வும் இலங்கையிலும் எகிப்திலும் பிரதிநிதித்துவப்படுத்தினர்.

இலங்கை முஸ்லிம்கள் போர்த்துக்கீசர் (கி.பி. 1505 – 1658), ஒல்லாந்தர் (1658 – 1796) ஆட்சியில் பல துன்பங்களை அனுபவித்தனர். பொருளாதார ரீதியில் பல இழப்புக்களையும் கண்டனர். பிரித்தானியர் (கி.பி. 1796 – 1948) ஆட்சிக் காலத்தில் அத்தகு துன்பங்களை

முஸ்லிம்கள் அனுபவிக்காத போதும் மதமாற்ற முயற்சியில் பிரித்தானியர் பெரிதும் ஈடுபட்டனர். முஸ்லிம்கள் இம் முயற்சிக்கு பெரிதும் பலியாகாத போதும் ஆங்கில மொழி கற்பதை பாவச் செயல் என்று கருதி அதனை உதாசீனம் செய்தனர்.

இதனால் மற்றிரு சமூகத்தினரும் பொருளாதார, கல்வி, அரசியல் அம்சங்களில் முன்னேறிய அதேநேரம், முஸ்லிம்கள் மிகவும் பின் தங்கலாயினர். மரபு ரீதியான முஸ்லிம் தலைவர்கள் இதனைப் புரிந்து கொள்ள முடியாது போனபோதும் எம்.சி.சித்திலெப்பை இப்பிரச்சினையைப் புரிந்து செயற்பட்டார்.

இவ்விருவரும் அவர்கள் வாழ்ந்தகால, தத்தமது நாட்டின் சமூகப் பின்னணியில் பல்வேறு துறைகள் தொடர்பான பல சிந்தனைகளை முன்வைத்துள்ளனர். அவற்றுள் அவர்கள் முன்வைத்த கல்விச் சீர்திருத்தச் சிந்தனைகள் மகத்தானது. இவ்விருவரும் முன்வைத்த சீர்திருத்தச் சிந்தனைகளும், அவர்களது பத்திரிகைத்துறை ஈடுபாடும், கல்வி தொடர்பான பல செயற்பாட்டு நடவடிக்கைகயுளும் பற்றி நோக்கும் போது இருவரினதும் சீர்திருத்த முயற்சிகளிலும் ஒத்த பண்புகள் காணப்படுவதனைப் பார்க்க முடிகின்றது.

## அறிஞர் எம்.சி.சித்திலெப்பை (1838 - 1898)

### வாழ்க்கை வரலாறு

கண்டி நகரில் பிரசித்தி பெற்ற வழக்கறிஞரான சித்திலெப்பை மரைக்காரின் மூன்றாவது மகனாக 1838 ஜுன் மாதம் 11ம் திகதி முகம்மது காசிம் பிறந்தார். சித்திலெப்பை மரைக்கார் முகம்மது காசிம் மரைக்கார் என்ற தமது பெயரை எம்.சி.சித்திலெப்பை என்றே பெருவழக்கில் ஆக்கிக்கொண்டார். இவர் அரபு, தமிழ், சிங்களம், ஆங்கிலம் போன்ற பல மொழி தெரிந்த கல்விமானாக அன்று திகழ்ந்தார். 1871 ஆம் ஆண்டு செய்யிதா உம்மா என்ற பெண்மணியை திருமணம் செய்து கொண்டார். செய்யிதா உம்மா சிறந்த மார்க்கப் பற்றும், சிறந்த கல்வியும் கொண்டிருந்ததால் கணவனின் சிந்தனைப் பாங்குடன் இயைந்து செல்வதற்கும், அவரது செயற்திட்டங்களுக்கு ஒத்துழைப்பு நல்குவதற்கும் அவரால் முடிந்தது.

1862 இல் மாவட்ட நீதிமன்றப் புரக்டராகவும், 1864 இல் சுப்ரீம் நீதிமன்றப் புரக்டராகவும், 1874 – 1878 வரை நீதிபதியாகவும் கடமையாற்றினார். அறிஞர் சித்திலெப்பை முஸ்லிம், முஸ்லிம் அல்லாத சமூகங்களுடனும் நெருங்கிப் பழகினார். இஸ்லாமிய மெய்ஞ்ஞானத்துறை, தத்துவ இயல் என்பவற்றுடன் இவருக்கு ஏற்பட்ட தொடர்பு அவரது சிந்தனையில் ஆன்மீகம், உலகியல் எனும் இரு துறைகளிலும் செல்வாக்குச் செலுத்தியது. அது மாத்திரமல்லாது இலங்கைக்கு நாடு கடத்தப்பட்ட எகிப்திய சுதந்திப் போராட்ட வீரர் ஒராபி பாஷா, உலக முஸ்லிம் ஐக்கியத்துக்காக குரல் கொடுத்த ஜமால்தீன் ஆப்கானி மற்றும் முகம்மது அப்து□ என்பவர்களின் சிந்தனைத்தாக்கம் அவரை ஒரு முற்போக்கான சீர்திருத்த வாதியாக மாற்ற வழி கோலியது.

அறிஞர் எம்.சி.சித்திலெப்பை 1898 இல் மரணித்தார். சுமார் 60 வருடங்கள் இவ்வுலகில் வாழ்ந்த அவர் தனது வாழ்வின் பெரும் பகுதியை கல்விப் பணிக்கே பெரிதும் செலவிட்டார். இதனால் இவர் "இலங்கை முஸ்லிம் கல்விப்பணி முன்னோடி" என அழைக்கப்படுகிறார்.

### வாழ்ந்த காலப் பின்னணி

போர்த்துக்கேயர் 1505ம் ஆண்டில் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்ததோடு இலங்கை முஸ்லிம்களின் வாழ்க்கையில் ஆரம்பமான இருள் மீண்டும் விடிவு காண்பதற்கான அறிகுறிகள் தோன்ற மூன்று நூற்றாண்டுகளுக்கு மேலாகிவிட்டது. இக்காலப் பிரிவை அவாவி நின்ற ஐரோப்பிய ஆதிக்கம் இந் நாட்டில் வாழும் சகல சமூகத்தவரையுமே நிலை குலையச் செய்து விட்டது அவ்வாதிக்கம் தனது பன்முகப்பட்ட வெளிப்பாட்டில் அரசியல், பொருளாதாரம், கல்வி, கலாசாரம் எனப் பல துறைகளில் தாக்கங்களை ஏற்படுத்தியது. அவற்றுள் அரசியல், பொருளாதாரம்,

மீதான தாக்கம் வெளிப்படையாக அறிந்துகொள்ளக் கூடியதாக இருந்த அதேநேரம் கல்வி, கலாசாரத் துறைகளின் மீதான தாக்கம் மறைமுகமானதாகவும், கூடிய சேதம் விளைவிக்கத் தக்கதாகவும் இருந்தது,

ஒரு காலத்தில் சிரமத்தோடு சகித்து வந்த ஒரு அவல நிலையை காலப்போக்கில் உற்சாகத்தோடு ஏற்றுப் போற்றும் அளவிற்கு மக்கள் தாழ்வு மனப்பான்மை கொண்டவர்களாகி விட்டனர். “மேற்கத்தயவை எல்லாம் மேலானவை” என்று கருதுமளவிற்கு அவர்கள் தன்மானமின்றித் தாழ்ந்து விட்டிருந்தனர். 19ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இலங்கையில் கிறிஸ்தவர்களின் பிரச்சாரப்பணி பௌத்தர்களையும், இந்துக்களையும் தம்பால் ஈர்த்துக்கொண்ட அளவு முஸ்லிம்களை ஈர்க்கவில்லை. ஆயினும் கிறிஸ்தவப் பிரச்சாரத்திற்குட்பட்ட முஸ்லிம்களும் காணப்பட்டனர்.

இதே வேளை பௌத்த, இந்து சமூகங்கள் விழிப்படைந்து தமது முயற்சியாலும், அவ்வினப் பெரியார்களின் சிந்தனை ரீதியான வழிகாட்டல்களினாலும் கல்வி மற்றும் அரசியல், பொருளாதாரத் துறைகளில் துரிதமாக முன்னேறிக்கொண்டிருந்த, அதேவேளை கடல் கடந்து வர்த்தகம் செய்த முஸ்லிம்களின் பரம்பரையில் வந்த இலங்கை முஸ்லிம்கள் வர்த்தக வாய்ப்புக்களை இழந்தும், கல்வித் துறையில் தாழ்ந்தும், புதிய பொருளாதார முயற்சிகளில் ஈடுபாடின்றியும் காணப்பட்டனர்.

மேலும் பௌத்த, இந்து சமூகத்தைப் போல முஸ்லிம்கள் கிறிஸ்தவ சமயத்தை ஏற்காத போதும் கிறிஸ்தவப் பாடசாலைகளில் படித்த முஸ்லிம்களில் சிலர் கிறிஸ்தவர் போல் செயற்பட்டு இஸ்லாமியக் கலாசாரத்தையும், சமயம் சார்ந்த கல்விப் போதனைகளையும் புறக்கணித்து வாழ்நது வந்தனர். அது மாத்திரமன்றி இஸ்லாத்திற்குள் ஊடுருவியிருந்த இஸ்லாத்திற்கு முரணான சிந்தனைகளயும், நம்பிக்கைகளையும், செயற்பாடுகளையும் இஸ்லாம் எனக் கருதிச் செயற்பட்டனர். இலங்கை முஸ்லிம்களின் வாழ்வில் மூட நம்பிக்கைகளும், போலிச் சடங்குகளும் நிறைந்து காணப்பட்டிருந்தன.

அன்று இலங்கையிலிருந்த இஸ்லாமிய மதப் போதகர்களும், அறிஞர்களும் அறிவும், பண்பாட்டுத் தரமும் குறைந்தவர்களாக இருந்ததால் இஸ்லாத்திற்கு ஒவ்வாத பழக்கங்களும், மூட நம்பிக்கைளும் சமூகத்தில் வளரத் துணையாகின. முஸ்லிம்களின் விவாகம், மரணச் சடங்குகள், மார்க்க அனுஷ்டானங்கள் போன்றன மூட நம்பிக்கைகளுடனும், சடங்குகளுடனும் இணைக்கப்பட்டிருந்தன. இதற்கெல்லாம் காரணம் சமய ரீதியான கல்வியறிவு இன்மையே என்பதை “முஸ்லிம் நேசன்” இவ்வாறு அன்று வெளியிட்டிருந்தது. “காசுக்காக வேண்டி மார்க்கத்தை வெந்தேசு போடுபவர்களும் சிலர் இருக்கின்றனர். ஆலிம்களிலும், ஹாஜிகளிலும் சிலர் சொற்ப படிப்பறிவு உள்ளவர்கள்தான்:

இஸ்லாமிய உயிர் நாடி ஆன்மீகச் சிந்தனை எனலாம். ஐரோப்பியர் காலத்தில் இலங்கை முஸ்லிம்கள் அனுபவித்த துன்ப துயரங்கள், அறிவியல் பின்னடைவுகள் என்பன அவர்களின் ஆன்மீக சிந்தனையையும், பயிற்சியையும் பெரிதும் பாதித்திருந்தன. மார்க்க கல்வி மக்களிடம் குறைந்து காணப்பட்டமை சமூக முன்னேற்றத்திற்குத் தடையாக அமையலானது. மரபு ரீதியான அறிஞர்களின் செல்வாக்கே அன்று பெரிதும் இருந்தது. இவர்கள் சித்திலெப்பையால் முயற்சிக்கப்பட்ட மேனாட்டு கல்வி, மற்றும் ஆங்கில மொழி இவற்றைப் படிப்பதிலிருந்து முஸ்லிம்களைத் தடுத்தனர். ஆங்கிலம் கற்பது ஹராம் (கூடாது) எனவும் பத்வா (மார்க்கத்தீர்ப்பு) வழங்கினர்.

இதன் விளைவாக முஸ்லிம்களின் ஆங்கில மொழிப்புலமையுடையோர் குறைந்து, தமது கல்வி மற்றும் பொருளாதாரம் அனைத்திலும் பின்னடைவையே சந்தித்தனர். அவர்கள் தமது கல்வி, பொருளாதார, அரசியல் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக ஆங்கிலேயருடன் தொடர்பு கொள்ள ஆங்கில மொழி அன்று அவசியப்பட்டது. எனவே மரபுவழி உலமாக்கள் சிலரின் பத்வா (மார்க்கத்தீர்ப்பு) ஆங்கில மொழி அறிவைப் பெறத் தடையாக அமைந்தமை முஸ்லிம் சமூக முன்னேற்றத்துக்கோர் தடைக்கல்லாக அமைந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஆங்கில மொழி கற்பது தொடர்பான பத்வா (மார்க்கத்தீர்ப்பு) அன்றைய சூழலில் சில நியாயங்கள் கருதி ஏற்றுக்கொள்ளக் கூடியதாக அமைந்திருந்தாலும் முஸ்லிம்களின் பொருளாதார, அரசியல், கல்வித் துறைகளில் பாரிய வீழ்ச்சியை அது ஏற்படுத்தியதென்பதும் தெளிவானதாகும் உண்மையில் முஸ்லிம் உலகில் ஏற்பட்ட ஐரோப்பிய காலனித்துவத்தின் நோக்கங்கள், முஸ்லிம்களை அரசியல் ரீதியாகப் பிளவுபடுத்துவதும், பொருளாதார ரீதியாகச் சுரண்டுவதும், கலாசார ரீதியாக அன்னியப்படுத்துவதுமாகும்.

இம் மூன்று நோக்கங்களையும் ஐரோப்பியர் அடைந்து கொள்ள அவர்களது முயற்சிகளுள் முதன்மையானதே தமது கல்வி முறையை முஸ்லிம்கள் மத்தியில் ஏற்படுத்தி சிந்தனை ரீதியானமாற்றங்களை ஏற்படுத்த முயற்சித்தமையாகும். இந்த முயற்சி இலங்கை முஸ்லிம்களையும் பாதிக்காமலில்லை. இப்பாதிப்பை அறிஞர் சித்திலெப்பை குறிப்பிடும்போது:

"19ம் நூற்றாண்டின் பிற்பகுதி இலங்கை முஸ்லிம்களின் நிலை கல்வியெனும் விதைபயிரை ஏற்கத்தானும் பொருத்தமற்ற உவர்த்தரையாகக் காணப்பட்டது. எமது சமூகம் கல்விபெறத் தகுதியும், ஆர்வமும் அற்றதாக இருந்ததோடு மட்டுமன்றி அத்தகுதியின்மையே தம் மேன்மையெனக் கொண்டாடும் ஒரு சமூகமாகவும் எமது சமூகம் காணப்பட்டது"

இத்தகைய நிலையிலிருந்த மக்களிடையே தான் அறிஞர் சித்திலெப்பை முஸ்லிம் சமூகத்தின் சமய, சமூக, பொருளாதார, அரசியல் துறைகளில் சீரான மாற்றங்களையும், வளர்ச்சியையும் ஏற்படுத்துவதாயின் கல்வித்துறையில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்துவதன் மூலம் மாத்திரமே முடியும் என்று கருத்தில் கொண்டு அவர்கள் இரவையும், பகலையும் தன் பேச்சையும், மூச்சையும் கல்வித் தொண்டிலேயே கழிக்கலானார்.

## அறிஞர் சித்திலெப்பையின் கல்விச் சிந்தனைகள்

அறிஞர் சித்திலெப்பை அவர்களால் அன்றைய சமூக மேம்பாட்டிற்காக முன்வைக்கப்பட்ட கல்விச் சிந்தனைகளும், பணிகளும் அவர் வாழ்ந்த கால சூழலைக் கருத்திற் கொண்டு நோக்கும் போது மிக உயர்ந்த தரத்தில் கணிக்கப்பட வேண்டிய சிந்தனைகளாகும். முஸ்லிம்களின் கல்வி வளர்ச்சியில் நாட்டம் கொண்ட சித்திலெப்பை அத்துறையில் ஆர்வமற்றும், பின்தங்கியும் கிடந்த மக்களை ஊக்குவிப்பதற்கான பிரச்சார சாதனமாக "முஸ்லிம் நேசன்" வார இதழைப் பயன்படுத்தினார். 1833ம் ஆண்டு டிசம்பரின் அவ்விதழின் ஆரம்பத்துடன் முஸ்லிம்களின் கல்வித்துறையில் ஒரு திருப்பம் உருவாகிவிட்டதெனலாம்.

அறிஞர் சித்திலெப்பையின் சிந்தனையில் முஸ்லிம் உலகில் இடம் பெற்ற பல நிகழ்வுகள் ஆதிக்கம் செலுத்தின. இந்த வகையில் இந்தியாவில் அலிகார் கல்லூரியில் (1875இல்) செய்யது அஹமதுகான் மேற்கொண்ட முயற்சி, ஆங்கிலேயர்களுக்கு எதிராக எகிப்தில் ஜமாலுத்தீன் ஆப்கானி, முகம்மது அப்துஹு", ஒராபி பாஷா போன்றோர் மேற்கொண்ட போராட்டம், இஸ்லாமிய உணர்வை ஆசியாவிலும், ஆபிரிக்காவிலும், விழிப்படையச் செய்ய உதவிய துருக்கிய இளைஞர்களின் கிளர்ச்சி போன்ற பல நிகழ்வுகள் சித்திலெப்பையின் சிந்தனையில் முஸ்லிம்கள் மத்தியில் விழிப்புணர்வையும், சீர்திருத்தத்தையும் ஏற்படுத்த மறைமுகமாக உதவியது எனலாம்.

இந்தப் பின்னணியில் அவர் முன்வைத்த அரசியல், சமய, பொருளாதார சிந்தனைகள் மிகச் சிறப்புற்றுக் காணப்படுகிறது. தான் வெளியிட்ட முதலாவது "முஸ்லிம் நேசன்" பத்திரிகையில் அவர் இப்படி எழுதியிருந்தார்.

"நாம் ஒருங்கிணைந்து கல்விக் குறிக்கோளை அடையும் வரை உழைக்க வேண்டிய காலம் வந்து விட்டது. கல்வி என்பது எழுத, வாசிக்க மட்டுமல்ல நன்கு கற்றுத் தேறுவதுமாகும், மனதினை அகலப்படுத்தி, நுண்மதியினை கூர்மைப்படுத்துவது அதுவாகும். இதற்காக தமிழ் மட்டும் போதாது, அறபு, ஆங்கில மொழிகளையும் கற்றுத் தேற வேண்டும்".

ஆங்கிலேயர்களின் தாராளப் போக்கினால் ஓரளவு சுதந்திரமாக செயற்பட இலங்கை முஸ்லிம்களுக்கு வாய்ப்புக் கிடைத்த போதும் அவர்களின் பின்தங்கிய நிலை காரணமாக அவ்வாய்ப்பைப்பயன்படுத்துவதில் அவர்கள் போதிய ஆர்வம் காட்டவில்லை. இச்சூழலில் தான்

ஏற்படுத்த சிறப்பான கல்விச் சிந்தனைகளை மாத்திரமின்றி, கல்வி வாய்ப்பு வசதிகளையும் இலங்கையில் ஏற்படுத்தினார். அவரது கல்விச் சிந்தனைகள் இன்றைய காலத் தேவையாகக் கூட அமைந்து காணப்படுகின்றது.

மத்ரஸாக்களில் (Arabic Colleges) அறபு மொழியில் படிக்கும் கல்வி மட்டுமே பயனுள்ள கல்வி என்ற சிந்தனைப் பாங்கே முஸ்லிம் சமூகம் கல்வியைப் புறக்கணிக்க காரணம் என்பதால் கல்வி பற்றிய இச்சிந்தனைப் பாங்கை மாற்றியமைக்க முதற்கண் விரும்பினர். அறிஞர் சித்தி லெப்பபை ஆங்கில மொழியில் நவின கல்விப் பயிற்சிகளையும் அறபு மொழியிலான சமையக் கல்விப் பயிற்சிளையும் பெற்றிருந்தமையினாலும் ஆங்கிலம், அறபு, இவ்விரு மொழிகளிலும் கிடைக்கக் கூடிய பயன்களை அவர் அறிந்திருந்ததனாலும் இஸ்லாமிய சமைய நலன்கள் எதுவும் புறக்கனிக்கப்பப்படாத நிலையில் கல்விப் போதனை மாணவர்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்று கருதினர்.

சித்தி லெப்பை அறபு மொழியில் அளவற்ற அபிமானம் உடையவராகக் காணப்பட்டார். அம் மொழியை இலங்கை முஸ்லிம்களின் வீட்டு மொழியாக்குவதற்கு அவர் எடுத்த முயற்சி சான்று பகிர்கிறது. "நாம் அச்சிட்டு வெளியாக்கிய ஹிதாயதுல் காஸிமிய்யா என்ற கிதாபின் நூல் முகவுரையில் இலங்கை முஸ்லிம்கள் அரபு பாஷையை வீட்டுப் பாஷையாக்குவதற்கும் முஸ்லிம்களின் இல்மில் (அறிவு) தேர்ச்சி அடைவதற்கும் எனது ஹாயத்தில் (வாழ்வில்) மிகுதியாய் இருப்பதை காணிக்கையாக்கி விட்டேன் என்று சொல்லிய தீர்மானத்தை பற்றிப் பிடித்தவனாக இருப்பதற்கு அல்லாஹுவின் உதவியைத் தேடுகின்றேன்".

இஸ்லாத்தையும் இஸ்லாமியக் கலாசாரத்தையும் அவற்றை முழுமையாக அடையும் சாதனமாகிய அறபு மொழியை அவர் போற்றியதில் வியப்பில்லை. ஆங்கிலக் கல்வியின் அவசியத்தை நன்குணா்ந்த சித்திலெப்பை முஸ்லிம் மக்களிடையே அவர்களுடைய சம்பிரதாயப் பழக்க வழக்கங்களுக்கும் பங்கமேற்படாமல் புதிய கல்வி முறையைப் புகுத்துவதில் நாட்டம் கொண்டவராயிருந்தார்.

இலங்கை முஸ்லிம்கள் நீண்ட காலமாக பொருள் அறியாது அல்குர்ஆனை வாசிக்க மட்டும் கற்றிருந்தனர். இத்தகைய வாசிக்க மாத்திரமான பயிற்சி போதுமானதென்று பரம்பரை பரம்பரையாக அவர்கள் நம்பினர். பயனற்ற இச்சிந்தனையை மாற்றியமைத்து அறிவுக்கும், சிந்தனைக்கும் உதவக்கூடிய கருத்துக்களை முன்வைத்தார். அவரது சிந்தனைகள் ஒரு சாராரை மாத்திரம் அவாவி நிற்காது சகலரும் கல்வி கற்க வேண்டும் என்பதை வலியுறுத்துவதாக அமைந்திருந்தது. முஸ்லிம்கள் மதமாற்றத்திற்கு எதிரானவர்களே அல்லாது ஆங்கிலக் கல்வி பெறுவதற்கு எதிரானவர்களல்லா் என்பதை அவரது ஆழ்ந்த அறிவும், சமூகத்துடனான அவரது தொடர்பும் அவருக்கு உணர்த்தின. ஆதலால் சமயச் சூழலில் நவீன கல்வி வழங்கப்பட வேண்டும் என்ற சிந்தனையை முன்வைத்தார். முஸ்லிம்களால் நடாத்தப்படும் பாடசாலைகளிலும் சமயச் சூழல் புறக்கணிக்கப்படுவதை கடுமையாக விமர்சித்தார்.

முஸ்லிம் பாடசாலைகளில் முஸ்லிம் அல்லாதோர் பொறுப்பாகவோ, அதிபர்களாகவோ இருப்பதை விமர்சித்தார். அன்று வங்காளதேச பாடசாலை, இந்திய அலிகார் பாடசாலையிலும் காணப்பட்ட இந்நிலையை விமர்சித்து அவ்வாறானவர்கள் பொறுப்பாக இருப்பது இஸ்லாமிச் சூழலை பாதிப்படையச் செய்யும் என்பதால் முஸ்லிம் பாடசாலைகளில் முஸ்லிம் அதிபர்கள், ஆசிரியர்களே இருக்க வேண்டும், அவர்களே கற்பிக்க வேண்டும் என்ற சிந்தனையை முன்வைத்தார்.

முஸ்லிம் பாடசாலைகளின் கல்வித் திட்டம் சமயக் கல்வியை மாத்திரம் கொண்டிராது, உலகியற் கல்வியையும், சமயக் கல்வியையும் சம காலத்தில் வழங்குவதாக இருக்க வேண்டும். இவ்விரு துறைசார் கல்வியில் தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கே சான்றிதழ்கள் வழங்கப்பட வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தினார்.

கல்வி பயனுடையதாக மட்டுமன்றி, மாணவர்கட்கு சுமையற்றதாகவும், நவீன நுட்ப முறைகளை கொண்டதாகவும் அமையப் பெற வேண்டும் என்றார். வெறுமனே சிந்திக்கத் தூண்டும் விதத்தில் அல்லாது மனப்பாடமிட்டுப் படிக்கும் முறையை விமர்சித்தார். பாடநூல்கள் இஸ்லாமியப் போதனைகளை, ஒழுக்கவியலை உள்ளடக்கியதாக அமைய வேண்டும் என்ற கருத்தையும், இதற்காக பாட நூல்களையும் எழுதும் முயற்சியையும் மேற்கொண்டார்.

அவர் ஹிதாயதுல் காஸிமிய்யா, அறபு முதலாம் புத்தகம், இரண்டாம் புத்தகம், சுருத்துஸலாத், (தொழுகை விதிகள்) அறபு நகுவு, (அறபு இலக்கனம்) தமிழ் முதலாம் புத்தகம் போன்ற நூல்களை எழுதினார். "ஹிதாயதுல் காஸிமிய்யா" எனும் நூல் கீழைக்கரையின் பிரபல்யமான குத்புத்தீன் லெப்பை ஆலிம் அவர்களுடைய மத்ரஸாவில் போதிக்கப்பட்டு வந்தமை பற்றி "ஆலிம் புலவர் ஆன்ற ஒழுக்கம்" என்ற நூலின் ஆசிரியர் ம.க.மு. முஹ்யுத்தீன் மரக்காயர் குறிப்பிடுகிறார்கள்.

சித்திலெப்பை தனது கல்விச் சிந்தயிலிருந்து கல்வி ஊட்டல் முறையை அவர் இரண்டாக விளக்கியிருப்பதை அறியலாம். அவையாவன: 1.முறைசார் கல்வி (Formal Education) 2.முறைசாராக் கல்வி (Non Formal Education)

முறைசார் கல்வியைப் பாடசாலைகள், மத்ரஸாக்கள் (Arabic Colleges) ஊடாக வளர்க்க வேண்டும் என்று கருதினார். அதற்காக கல்வி வாய்ப்புக்களை ஏற்படுத்த முயற்சித்து கொழும்பு சோனகத் தெருவில் அல்மத்தரஸதுல் கைரிய்யா (1884), தற்போது மருதானை ஸாஹிறாக் கல்லூரி எனப் பிரபல்யம் அடைந்துள்ள அல் மத்ரஸதுல் ஸாஹிரா (1882) போன்ற பாடாசலையைத் தமது முயற்சியால் ஆரம்பித்து வைத்தார்.

அவரது முறைசார் கல்வி வழங்கல் சிந்தனையூடாகவே நாட்டில் பல பாகங்களிலும் கண்டி, உடுநுவர, கேகாலை, ஹட்டன், பதுளை, நுவரெலியா, கம்பளை, குருனாகல், பொல்கஹவல எனப் பல நகரங்களிலும் முஸ்லிம் பாடசாலைகள் தோன்றின. கண்டியில் சித்திலெப்பை ஆரம்பித்த பெண் பாடசாலையே இலங்கையில் எழுந்த முதலாவது முஸ்லிம் பெண் பாடசாலை எனலாம்.

இளமையில் படிப்பதற்காக வாய்ப்பினைத் தவறிய, மற்றும் வயோதிபத்திலும் படிக்க ஆர்வமுள்ளவர்களுக்கு முறைசாராக் கல்வி வழங்கப்பட வேண்டும் என்ற கருத்தை முன்வைத்தார். இதன் பயனாக வயோதிபர்களுக்கான இரவு நேர வகுப்புக்களை, குர்ஆன், ஹதீஸ் போதனைகளை வழங்க "ஜம்மியத்துல் இஸ்லாமியா" எனும் சங்கத்தின் மூலம் பங்காற்றினார்.

## செய்யத் முஹம்மது அப்துஹு (1849 – 1905) வாழ்க்கை வரலாறு

ஜமாலுத்தீன் ஆப்கானியின் மாணவரும், ஒராபி பாஷாவின் சமகாலத்தவரும், நண்பருமான முஹம்மது அப்துஹு கிழக்குலகத்திற்கும், மேற்குலகத்திற்கும் இடையே இஸ்லாமியப் பண்பாட்டிற்கியைந்த இணைப்பினை உருவாக்கத் தீவிரமாக உழைத்த மார்க்க மேதையாவார்.

கி.பி. 1849ம் ஆண்டு எகிப்தின் "மஹ்லாத் நஸர்" எனும் நைல் நதிக் கரையோரக் கிராமத்தில் பிறந்து, 1905 இல் மரணித்தார். அப்துஹுவின் தந்தை அபு ஹைருல்லாஹ் ஆவார். பாத்திமா ஜுனைனா அவரது தாயாவார். சிறந்த மார்க்கப்பற்றும், பக்தியுமிக்க குடும்பத்தில் பிறந்த இவர் தனது ஆரம்பக் கல்வியை பெற்றோரிடம் கற்று இளம் வயதிலேயே அல்குர்ஆனை மனனமிட்ட ஹாபிழாகவும் திகழ்ந்து தந்தாவி அஹ்மதி பாடசாலையில் தொடர்ந்து கல்வியைக் கற்றார். இங்கு பின்பற்றப்பட்டு வந்த, பாடங்களை மனனம் செய்யும் முறையை அப்துஹு வெறுத்தார். "ஒன்றுமே தலைக்கேறாத நிலையில் காலத்தைக் கழித்தேன்" என இங்கு கல்வி கற்ற காலத்தைப் பற்றி பின்னர் குறிப்பிட்டிருந்தார்.

தனது 16வது வயதில் திருமணம் செய்து கொண்ட இவர் தனது மாமனாரான சூபி சேஹ் தர்வேஷ் காதரின் சூபித்துவ சிந்தனைக்கு ஆட்பட்டார். அப்துஹு பெற்ற சூபித்துவப் பயிற்சி அவரது வாழ்நாள் முழுக்க நீடித்தது. தனக்கு அறிவின் வாயிலைத் திறந்து விட்டவர் என்று தனது மாமனார் பற்றி பின்னர் கூறினார்.

கி.பி 1866 தனது 17வது வயதில் பாரியகல்வி எதிர்பார்ப்புகளுடன் அல் அஸ்ஹரில் இணைந்தார். அங்கு மரபு ரீதியான கற்பித்தல் முறையே பின்பற்றப்பட்டதால் அதிலும் அவர் திருப்தியடையவில்லை. அல் அஸ்ஹரில் படித்துக்கொண்டிருக்கும் போது ஜமாலுத்தீன் ஆப்கானியின் தொர்பு ஏற்பட்டு அவரால் ஈர்க்கப்பட்டார். ஆதலால் அப்துஹு"வின் கல்வித் தேடல் பரப்பு விரிவடைந்தது.

1878இல் எகிப்தில் புதிதாக அமைக்கப்பட்ட தாருல் உலூம் பாடசாலையில் அப்துஹு" ஆசிரியராக நியமிக்கப்பட்டார். இதனால் சமூகவியல் விடயங்களை பேசவும், எழுதவும் சந்தர்ப்பங்களைப் பெற்றதுடன் தேசிய கல்விப் போதனைகள் பற்றி கருத்துக்களை முன்வைக்கவும் அவகாசத்தைப் பெற்றார். இக்கால் "அல் வகாயுவுல் மிஸ்ரிய்யா" எனும் பத்திரிகையின் பிரதம ஆசிரியராகவும் பணியாற்றினார். இதனூடாக தமது சிறப்பான சிந்தனைகளை வெளியிடத் தவறவில்லை.

1888இல் அங்கு அரச நீதிபதியாகக் கடமையாற்றினார். 1895இல் அல் அஸ்ஹரின் பரிபாலன சபை உறுப்பினராகவும், எகிப்தின் பிரதம முப்தியாகவும் (மார்க்கத்தீர்ப்பாளர்) செயற்பட்டார். முஹம்மது அப்துஹு", நவீன கால இஸ்லாமிய சிந்தனை வளர்ச்சிக்கு பங்காற்றியவர்களுள் சிறப்பானவர். அவர் ஓர் அறிவியலாளர், சீர்திருத்தச் சிந்தனையாளர், பாடசாலை ஆசிரியர், பத்திரிகையாளர் எனப் பல்வேறு கோணங்களில் அவர் புரிந்த பணிகள், அவர் முன்வைத்த சிந்தனைகள் யாவும் எல்லோரது உள்ளங்களிலும் சிறந்த தாக்கத்தை ஏற்படுத்தத் தவறவில்லை. இமாம் கஸ்ஸாலி அவர்களின் சீர்த்திருத்தப் பணிக்கு சமமானதாக அப்துஹு"வின் பனிகளை சிலர் ஒப்பு நோக்குவர். சுமார் 56 வருடங்கள் உயிர் வழ்ந்த முகம்மது அப்துஹு" அவர்கள், சமூக சீர்திருத்தம் பற்றி சிந்தித்த போது தேக்க நிலையிலிருந்த சமூகத்தை விடுவிக்க சிறந்த கல்விச் சிந்தனைகளெ அவசியம் என்பதை வலியுறுத்துவதில் பெரிதும் பங்காற்றினார். இதனால்தான் இவரை "அல் முஸ்லிஹு"ல்இல்மி" (கல்விப்பணிமுன்னோடி) என அழைக்கப்படுகிறது.

## வாழ்ந்த காலப் பின்னனி

இஸ்லாமிய சமூகம் உட்பலவீனங்களினாலும், சிந்தனை மற்றும் காலனித்துவத் தாக்கங்களினாலும் பலவீனமடைந்து சமூக நிலை தேக்க நிலையையும், வீழ்ச்சியையும் நோக்கிச் சென்று கொண்டிருந்த காலமே 19ம் நூற்றாண்டின் ஆரம்ப காலப் பகுதியாகும். இக்கால் புதிய சவால்களை எதிர் கொள்ளும் சக்தியை மரபு வாதிகளின் ஆதிக்கத்தால் எகிப்து இழந்திருந்தது. சமூக, சமய உட் பிரிவுகள், உட்சண்டைகள், சமயத்திற்கு எதிரான போதனைகள் யாவும் எகிப்தின் வீழ்ச்சியை வித்திட்டு கொண்டிருந்தது. மூட நம்பிக்கைகள் தலைவிரித்தாடின. சமயச் சார்பற்ற சிந்தனைகள் ஐரோப்பியரால் அறிமுகப்படுத்தப்பட்டு, சமூகம் பிளவுபட்டுக் காணப்பட்ட பரிதாப நிலை எகிப்தில் காணப்பட்டது.

சமயத்தையும், வாழ்க்கையையும் வேறுபடுத்திநோக்கும் சிந்தனைப் பாங்கு காணப்பட்டது. இஸ்லாமிய கலாசாரப் பாரம்பரியங்களை விட்டு ஆண்களும், பெண்களும் ஐரோப்பியப் பாணியில் ஆடை அணிபவர்களாகவும், உணவு மற்றும் நடைமுறைச் செயற்பாடுகள் அத்தனையிலும் மேற்குலகைப் பின்பற்றக் கூடியவர்களாகவும் காணப்பட்டனர்.

எகிப்தின் அரசியல் நிலை கவலைக்கிடமாகத் திகழ்ந்ததோடு, எகிப்தின் சமய சார்புடனான கல்வி முறை ஐரோப்பியக் கல்வி முறையின் காரணமாக மாற்றமும் பெற்றது. இஸ்லாமிய ஷரீஆ சட்டங்களில் மாற்றம் ஏற்பட்டதுடன், அறபு மொழியின் செல்வாக்கும் அங்கு குறைந்து காணப்பட்டது. ஐரோப்பிய அரசியல், மற்றும் பொருளாதாரச் சுரண்டல்களுக்கு எகிப்து ஆட்பட்டிருந்தது. எனவே எகிப்து உட்பட முஸ்லிம் உலகு அரசியல், பொருளாதாரம், கல்வி, கலாசாரம், சமய ரீதியான தமது தனித்துவத்தை இழந்து மேற்கத்தேய பிடியில் சிக்கித் தவித்த காலப்பகுதியில் எகிப்தில் செய்யத் முகம்மது அப்துஹு" தனது கல்விச் சிந்தனைகளை முன்வைத்தார்.

## முகம்மது அப்துஹு"வின் கல்விச் சிந்தனைகள்

முகம்மது அப்துஹு" அவர்கள் முன்வைத்த கல்விச் சிந்தனைகளுக்கு அவர் கற்ற கல்விக் கூடங்களில் காணப்பட்ட பொருத்தமற்ற கற்றல், கற்பித்தல் முறைகளும், அவர் வாழ்ந்த கால சமூகப் பின்னணியுமே உந்து கோலாய் அமைந்தது எனலாம்.

எகிப்தின் தந்தாவி அஹ்மதிப் பாடசாலையிலும், அல் அஸ்ஹரிலும் காணப்பட்ட கல்விப் போதனா முறைகளில் காணப்பட்ட குறைகளைச் சாடினார். குறிப்பாக மனனம் செய்யும் முறையை விமர்சித்து, இம் மனன முறை மாத்திரம் அறிவு விருத்திக்கு உதவாது, அது சிந்தனைத் தேக்க நிலையை அவனில் ஏற்படுத்தும் என்று கருதினார். எனவே சிந்தனை விருத்தியை ஏற்படுத்தும் வகையிலான கற்றல் கற்பித்தல் இடம்பெற வேண்டுமென வலியுறுத்தி, அல் அஸ்ஹரின் போதனாசிரியர்களால் தான் பயனடையவில்லை என்றும் "அல் அஸ்ஹரில் தனக்கு ஏற்பட்ட அறிவு ரீதியான இழப்பு ஈடு செய்யப்படவே இல்லை" எனவும் முஹம்மது அப்துஹு" குறிப்பிட்டார். இதன் விளைவாக சிறந்த கல்வி மாற்றத்தை அல் அஸஹரில் ஏற்படுத்தவென தனது கருத்துக்களை வெளியிட்டார். இவரின் தூண்டுதலினால் அல் அஸ்ஹருக்கென ஒரு பரிபாலனக் குழு ஏற்படுத்தப்பட்டு அவரும் உறுப்பினராக இருந்து சிறப்பான மாற்றங்களை அங்கு ஏற்படுத்த முயற்சித்தார். எகிப்தில் காணப்பட்ட பாடசாலைகளில் நிலவிய கல்வி வீழ்சிக்கு மாற்று வழி காண்பதே அப்துஹு"வின் சிந்தனையின் ஒரு பகுதியாக அமைந்து காணப்பட்டது. ஐரோப்பிய முறையில் அமைந்த பாடசாலைகள் வழங்கும் சமயச் சார்பற்ற கல்விமுறையை அது தவறானது என்பதை உணர்த்தினார்.

சமூகச் சீர்திருத்தம் என்பது சமயத்தை உதாசீனம் செய்வதாக இராது இஸ்லாத்தின் வரம்புக்குள்ளிருந்தே உருவாக்கப்படுதல் வேண்டும் என்றும், சமயம் சார்ந்த ஒழுக்கப் பெறுமானங்களையுடைய கல்வி முறை அவசியம் என்பதையும் வலியுறுத்தி, இறை நம்பிக்கைக்கு முரண்படாதவாறு எவற்றை மாற்றலாம், எவற்றை மாற்றக் கூடாது என்றும் இனம் காட்டவும் அவர் முயற்சித்தார். முஸ்லிம்களின் வீழ்ச்சிக்கும், சிந்தனை ரீதியான வீழ்ச்சிக்கும் காரணம் முஸ்லிம்கள் இஸ்லாத்தை விட்டு தூரமானதும், சமயக் குரவர்களின் ஈமானியக் குறைபாடுமே அடித்தளம் என்றார்.

அவரது காலத்தில் காணப்பட்ட விதி (கழாக்கத்ர்) பற்றிய தவறான நம்பிக்கை முஸ்லம்களை செயற்பாடு அற்ற சோம்பேறிகளாக மாற்றியிருந்ததைக் கண்ட முகம்மது அப்து□" அதற்கான சிறந்த விளக்கங்களை வழங்கி, கல்வியறிவுக் குறைபாடே அதற்குக் காரணம் எனக் கருதினார்.

இஸ்லாம் பகுத்தறிவுக்கு இயைபான மார்க்கம், அது நவீன உலக முன்னேற்றங்களுக்கு உதவவும், நவீன சவால்களை எதிர் கொள்ளவும் குர்ஆன், சுன்னவின் அறிவு அவசியம் என்றார். குர்ஆன் வாசிக்கப்பட மாத்திரம் உள்ளதல்ல, அது விளங்கிச் செயற்படுத்தப்பட வேண்டியதாகும், சமகாலச் சூழலில் அல்குர்ஆனை விளங்கி அதனை அறிமுகம் செய்ய வேண்டும் என்றார். அதற்காக "தப்ஸிருல் மனார்" என்ற தப்ஸீரையும் (குர்ஆன் விளக்கவுரை) எழுதினார். அத் தப்ஸீர் றசீத் அர்ரிழா என்பவரால் பூரணமாக எழுதி வெளியிடப்பட்டது. அத்தப்ஸீரின் கருத்துக்களும், சிந்தனைகளும் விளக்கங்களும் சிறந்த கல்வியல் போதனைகளை வெளியிட்டது.

சமூக சீர்திருத்தம் என்பது பற்றி முகம்மது அப்துஹு" சிந்தித்த போது தேக்க நிலையில் இருந்த சமூகத்தை விடுவிக்க கல்வி அத்தியாவசியம் என்பதை வலியுறுத்தினார். ஐரோப்பியர்களின் கல்விக் கூடங்கள் கிறிஸ்தவ சமயத்தைப் போதித்து மதமாற்ற முயற்சிகளில் ஈடுபட்டன. எனவே மேற்குக் கல்வியை கண்மூடித் தனமாக கற்பதை முகம்மது அப்துஹு" எதிர்த்தார்.

ஐரோப்பிய மொழிகளில் உள்ள நூல்களை மொழி பெயர்ப்பதோ, பாடசாலைகளை புதிதாய் திறப்பதோ அங்கு மேற்குலக நூல்களை கற்பிப்பதோ பயன்தராது என்று கருதியதோடு, அல் குர்ஆன் சுன்னாவுக்கு முரணில்லாத அறபு மொழியிலான மூல நூல்களை பாட நூல்களாக பயன்படுத்த வலியுறுத்தி ஆங்கில மொழி கற்பதை தடுக்காத அவர் அம்மொழிப் பயன்பாடு இஸ்லாமிய சமயத்தின் வளர்ச்சிக்காக அமைய வேண்டும் எனக் கருதினார்.

நன்கு மேற்பார்வை செய்யக் கூடிய, தேவையான வளங்களை பெற்றுக் கொள்ளக் கூடிய ஆற்றல் உள்ள ஒரு தலைவரின் வழிகாட்டலில் மட்டும்தான் கல்வியின் பயனை அடையச் செய்யலாம் எனவும் கருதினார்.

மேற்கத்தேய கல்வியை கற்ற அறிஞர்களின் கற்பித்தல் முஸ்லிம் சமய எழுச்சிக்கு பயன் தராது மேற்குலக அறிவுடன் சமய அறிவுள்ளோர்களே கற்பிக்க வேண்டும் என்றும் எகிப்திய பாடசாலைகளில் உலக, சமய இரு வகை அறிவையும் பெற்ற அறிஞர்களே போதிக்க வேண்டும் என்றும் கருதினார். நீண்ட காலமாக எகிப்திலும் துருக்கியிலும் மேனாட்டுக் கல்வி முறை அறிமுகப்படுத்தப்பட்டிருந்த போதும் எதிர்பார்த்த பயனை அது தரவில்லை. மேற்கத்தேய கல்வி சமூக ஐக்கியத்தை ஏற்படுத்துவதற்குப் பதிலாக அதனை மேலும் கூறு போடவே உதவியுள்ளது. தேசியம் இனவாதம் சார்ந்த ஆலோசனைகளை முன்வைத்து கோசமிடவும் ஐரோப்பிய வாழ்கை முறையை அறிமுகப்படுத்தவுமே மேற்கத்தேய கல்வி உதவியுள்ளன.

முகம்மது அப்துஹு" அனைவருக்குமான அடிப்படைக் கல்வி வழங்கப்படவேண்டும், சமய உட்பிரிவுச் சிந்தனைகளை களையக்கூடிய விதமாக சமயக்கல்வி வழங்கப்படவேண்டும், ஆரம்ப பாடசாலை மாணவர்களுக்கும் இஸ்லாம் பற்றிய சுருக்கமான விளக்கம் வழங்கப்படுதல் அவசியம் என்றும் எகிப்தில் ஆண், பெண் இருபாலாரும் மற்றும் சிறார்களும் உலகியல் கல்வியோடு இணைந்த சுதேச கல்வியையும் பெற்றுக் கொள்ள வேண்டும் என்றும் அத்தோடு எழுதவும், வாசிக்கவும் மற்றும் கணிதம், விஞ்ஞானம் போன்ற விடயங்களில் சிறார்களை பயிற்றுவிக்கவும் வேண்டுமெனவும் கருதினார். இஸ்லாத்தில் உள்ள வகுப்புவாத வேறுபாடுகளையும், இஸ்லாத்திற்கும் கிறிஸ்தவத்திற்கும் இடையிலான வேறுபாடுகள் குறித்தும் எடுத்துக் காட்டுவதாகவும் அவரது கல்விச் சிந்தனைகள் அமைந்திருந்தன.

கல்வியின் உள்ளடக்கம், நோக்கம், குறிக்கோள்கள் என்பன மாணவர்களின் தேவைகளை நிறைவு செய்யும் விதமாகவும், அவர்களுக்கு தொழில் வாய்ப்பை பெற்றுக் கொடுக்கக் கூடிய விதமாகவும் அமைந்திருப்பதன் அவசியத்தை வலியுறுத்தினார். மூன்று கட்டங்களாக மாணவர்களுக்கு கல்வி போதிக்கும் திட்டத்தை வகைப்படுத்தினார். அவையாவன:1. ஆரம்பப் பாடசாலை கலைத்திட்டம் 2. இடை நிலை பாடசாலை கலைத்திட்டம் 3.உயர் கல்விப் பாடாசலை கலைத்திட்டம்.

ஆரம்ப வகுப்புக்களில் இஸ்லாமியக் கோட்பாடுகளும், ஒழுக்கக் கோட்பாடுகளும் நபி (ஸல்) அவர்களினதும், சஹாபாக்களினதும் (நபித்தோழர்களினதும்) வாழ்க்கை வரலாறுகளையும் இதே போன்று இடை நிலை வகுப்புக்களில் இஸ்லாமிய ஷரீஆ (மார்க்கம்) மற்றும் மருத்துவம், இராணுவ அம்சங்கள், அரச உத்தியோகம் எனும் பல்வெறு துறைகளில் பயிற்சி பெறவேண்டும் என விரும்பும் மாணவர்களுக்கு அவ்வத் துறைகளுக்கு மேலதிகமாக தர்க்கவியல், அறிவுக்கோர் அறிமுகம், முரண்பாடுகள், சர்ச்சைகளின் போது நடுநிலையான சிந்தனைப் போக்கை கடைப்பிடிக்கும் பயிற்சிகள், இஸ்லாத்தையும், கிறிஸ்தவத்தையும் வேறுபடுத்தி அறியக்கூடிய சிந்தனைகளையும். உயர் கல்வி கற்போருக்கு, அல் குர்ஆனியக் கல்வி, ஹதீஸ் கலை, அரபு மொழியும் இலக்கணமும், ஒழுக்கவியல், உஸுல் அல் பிக்ஹ், அத்தாரீஹ் - வரலாறு, உஸுல் த∴வா – த∴வா வழிமுறைகள், கற்பித்தல் கலை ஆகிய பல் துறைசார் அம்சங்களையும் போதிக்க வேண்டும் என்று கருதிய அப்துஹ் போதனாசிரியர்கள் மேற்கத்தேய கல்வியை மாத்திரம் கற்றவர்களாக இல்லாது இஸ்லாமிய ஷரீஆவையும் அறிந்தவர்களாக இருப்பதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

அப்துஹ்வின் சீர்திருத்த சிந்தனைகளில் மார்க்க சீர்திருத்தம், அரசியல் சீர்திருத்தம், கல்விச் சீர்திருத்தம் ஆகிய வழிமுறைகள் காணப்பட்டன.

இவற்றுள் முதலிரண்டு சீர்திருத்த நடவடிக்கைகளை கல்விச் சீர்திருத்தச் சிந்தனைகளினூடாகவே நெறிப்படுத்தி, புதிய சவால்களை கல்வி ரீதியாகக எதிர் கொள்ளும் சக்தியை மரபு வாதிகளின் ஆதிக்கத்தால் எகிப்து இழந்து விட்டது என்பதை அப்துஹு" சுட்டிக்

காட்டினார். தான் முன்வைத்த கல்விச் சிந்தனைகளின் போது மரபு வழி அறிஞர்களின் எதிர்ப்பை அப்துஹு"வும் சந்திக்கத் தவறவில்லை. அன்று புரையோடிப் போயிருந்த மூட நம்பிக்கைகளை தனது சிந்தனைகள் மூலமாகவே அப்துஹு" களைந்தார். சமூக ஒழுக்கமே அவரது சிந்தனைகளின் அடியாக இருந்தது.

அப்துஹு" தனது சீர்திருத்தச் சிந்தனைகளை வெளியிட "அல் உர்வதுல் உஸ்கா", "அல் வகாயிஉல் மிஸ்ரிய்யா" என்ற பத்திரிகையையும் " றிஸாலதுத் தௌஹீத்", "அல் இஸ்லாம் வன் நஸ்ரானிய்யா" "மஅல் இல்ம்" போன்ற நூல்களையும் ஊடகமாகவும் "தாருல் உலூம் பாடசாலையை களமாகவும் பயன்படுத்தினார்.

சமூகத்தின் பழக்கவழக்கங்கள், தவறான சில நம்பிக்கைகள், சமூகக் கொடுமைகள் சமூக அரசியல் துஸ்பிரயோகங்கள் போன்றவற்றை அப்துஹு" விமர்சித்ததன் மூலம் சமூகத்தில் ஒழுக்கவியல் சீர்திருத்தத்தை (Moral Reform) அவாவி இருக்கிறார் என்பதனைக் காட்டுகிறது. கல்வியின் குறிக்கோள் சிறந்த மனப்பாங்கையும், ஒழுக்கத்தையும் மனிதனில் ஏற்படுத்துவது என்ற அடிப்படையில் அவர் முன்வைத்த கல்விச் சிந்தனைகள் யாவும் இக்குறிக்கோள்களையே அவாவி நின்றது எனலாம். எனவே சமூக, சமய, அரசியல், பொருளாதார துறைகளில் ஒழுக்கவியல் மேம்பாட்டுக்கு துணைபுரியும் கல்விச் சிந்தனைகளை முன்வைத்த ஒரு சீர்திருத்த முன்னோடியாக அப்துஹு" திகழ்கிறார். அவருடைய சிந்தனை என்றும் பொருந்தும் வகையில் உயிர்வாழும் சிந்தனைகளாக திகழ்வது ஈண்டு நினைவுகூரத்தக்கது.

## அறிஞர் முஹம்மது அப்துஹு", அறிஞர் எம்.சி. சித்திலெப்பை கல்வி சிந்தனைகள் ஓர் ஒப்பீடு.

எகிப்தில் முஹம்மது அப்துஹு", இலங்கையில் அறிஞர் எம்.சி. சித்தி லெப்பை இருவரும் முன்வைத்த சிந்தனைகள் சமய, சமூக, பொருளாதார, அரசியல், கல்வி என சகல துறைகளையும் அவாவி நின்றது. அவற்றுள் அவ்விருவரும் முன்வைத்த கல்விச் சிந்தனைகள் அளப்பரியது.

எகிப்து, இலங்கை இவ்விரு நாடுகளிலும் அரசியல், பொருளாதார, கல்வி, கலாசாரத் துறைகளின் வீழ்ச்சிப் போக்கே அப்துஹு"வினதும், சித்திலெப்பையினதும் சிந்தனைகளின் வெளிப்பாடாகும். இவ்விருவரும் புதிய சமூக மாற்றங்களை எதிர்கொள்வதற்கான நவீன கல்வியை முஸ்லிம்களுக்கு வழங்க வேண்டும் என்ற கருத்தை ஒருங்கே கொண்டிருந்தனர். தத்தமது நாட்டுச் சூழலை, சமூகப் பின்னணியை கருத்திற் கொண்டு முஸ்லிம்களின் கல்வி விருத்தியை உண்டு பண்ணுவதற்காக இவ்விருவரும் சிறந்த முயற்சிகளை செய்துள்ளனர். அம் முயற்சிகள் யாவும் ஒத்துப்போகும் பாங்கை நாம் காணலாம்.

அதாவது எகிப்தில், முஸ்லிம்கள் கல்வி கற்பதற்கான பாடசாலைகள் காணப்பட்டன. இருந்த போதும் அவை சிறப்பான பாடத்திட்டங்களையோ, பாட நூல்களையோ, போதனா முறையையோ கொண்டிருக்கவில்லை. இத்தகு நிலையை மாற்றியமைக்க அப்துஹு" முயற்சித்த பாங்கும், அவர் வெளியிட்ட கல்விச் சிந்தனைகளும் அறிஞர் சித்திலெப்பையின் கல்விச் சிந்தனைகள், கல்வி முயற்சிகளோடு ஒப்பு நோக்கும்போது ஒத்த பண்புகள் தென்படுகின்றன. எகிப்தில் அல் அஸ்ஹரையும், தாருல் உலுமையும் அப்துஹு" களமாகப் பயன்படுத்தியது போல மத்ரஸதுல் கைரிய்யாவை (ஸாஹிரா கல்லூரி) சித்திலெப்பை தனது சிந்தனைகளின் வெளிப்பாட்டுத் தளமாகப் பயன்படுத்தினார்.

அப்துஹு" எகிப்தின் அல் அஸ்ஹரில் மற்றும், தந்தாவி மத்ரஸாவில் எப்படி கல்வி மாற்றங்களை ஏற்படுத்துவதான சிந்தனைகளை முன்வைத்தாரோ அறிஞர் சித்தி லெப்பை அவர் ஆரம்பித்த பாடசாலைகளில் அறபு மொழியுடன் ஆங்கிலம், சமயம் போதிக்கப்பட வழிவகைகளை ஏற்படுத்தினார்.

கல்வி என்பது மனனமிடுவதும், பாடங்களை வாசித்தறிவது மாத்திரமல்ல சிந்தனைக்கும் மன விரிவுக்கும், தெளிவுக்கும் பல வித அறிவு நூல்களையும், சிறந்த கற்பித்தல் முறைகளையும் கொண்டமைய வேண்டும். கல்வி என்பது எழுத, வாசிக்க அறிந்திருத்தல் மட்டுமல்ல நன்கு

கற்றுத் தேறுவதுமாகும் என்ற சித்திலெப்பையின் கருத்துக்கள் அப்துஹு"வின் சிந்தனைகளுக்கு ஒத்துப் போகின்றது.

அப்துஹு"வின் ஆரம்பப் பாடசாலையான தந்தாவி மத்ரஸாவில் வெறுமனே மனனம் செய்வதும், வாசிப்பதுமே முறையாகக் காணப்பட்டது. இதனை அவர் விமர்சித்தார். அறிஞர் சித்திலெப்பை முஸ்லிம்களை மதமாற்றம் செய்வதற்கு கிறிஸ்தவர் முயற்சித்துக் கொண்டிருந்த போது முஸ்லிம்களிடம் அம் முயற்சி செல்வாக்குப் பெற்று விடக் கூடாது என்பதற்காக அல் குர்ஆன், சுன்னா, உடனான சமயப் போதனைகளுடன் முஸ்லிம்கள் கல்வி கற்க வேண்டுமென்ற சிந்தனைப் பாங்கை இலங்கையில் கொண்டிருந்தார்.

எகிப்தில் காணப்பட்ட கல்விக் கூடங்கள் அனைத்திலும் சமய சார்புடனான கல்வியே போதிக்கப்பட வேண்டும் என்ற சிந்தனைப் போக்கு அப்துஹு"விடமும் காணப்பட்டது. அறிஞர் சித்திலெப்பை கல்வி ஒரு சாரரை மாத்திரம் அவாவி நிற்காது சகலருக்கும் கல்வி என்ற கருத்தை முன்வைத்தார். இதற்காகவே முறைசார், முறைசாராக் கல்வியை முன்வைத்தர். அப்துஹு"வும் இச் சிந்தனைப் போக்கைக் கொண்டிருந்தார். மாணாக்கர்ளின் தேவைகள் நிறைவுறும் விதத்தில் போதிக்கப்படுவதை வலியுறுத்தினார். சமூகத்தில் மரபு கல்விமான்களுக்கும், வயோதிபர்களுக்கும் இஸ்லாமிய சமயத் தெளிவோடு கூடிய கல்விப் போதனையை வழங்க முயற்சித்தார்.

போதனாசிரியர்கள் வெறுமனே மேற்கத்தேயக் கல்வியை மாத்திரம் பெற்றிராது இஸ்லாமிய சமய அறிவுடையோராகவும் இருக்க வேண்டும். பாட நூல்கள் சமய நெறிக்குட்பட்டதாகவும் அமைய வேண்டும் என்று இருவரும் கருதினர். சமயஅறிவில்லாத அதிபர், ஆசிரியர்கள் போதிக்கும் பாடசாலைகள் கிறிஸ்தவ சமய ஊடுருவல்களுக்கு இலகுவாகிவிடும் என்ற கருத்தையும் கொண்டிருந்தனர். அப்துஹு" ஆரம்ப, இடைநிலை, உயர் பாடசாலைகளில் போதிக்கப்பட வேண்டிய விடயங்களையும், பாட நூல்களையும் சிபாரிசு செய்து பல சமய நூல்களும் எழுதினார். சித்திலெப்பையும் தான் சிபாரிசு செய்த பாடப் போதனைகளுக்காக பல நூல்கயையும் எழுதினார்.

அவற்றுள் பல ஆரம்பப் போதனா நூல்களாக அன்று இலங்கையில் பயன்படுத்தப்பட்டுவந்தன. இவ்விருவரும் அறபு மொழிக்குக் கொடுத்த அதே முக்கியத்துவத்தை ஆங்கில மொழிக்கும் கொடுத்தனர். இருவரும் மேற்கத்தேயக் கல்வியை கற்றவர்கள் என்பது மட்டுமல்ல, சமய அறிவும் மிகுந்து காணப்பட்டனர். அப்துஹு" மரபுவழி அறிஞர்களால் விமர்சிக்கப்பட்டது போன்று சித்திலெப்பையும் விமர்சனத்திற்குள்ளானவராவார்.

முஸ்லிம் சமூகத்தின் எழுத்தறிவின்மை, ஐக்கியமின்மை, பொறாமை, பேராசை, போலிக் கௌரவம் என்பனவற்றை இவ்விருவரும் சுட்டிக் காட்டி, இக் குறைபாடுகளிலிருந்து சமூகத்தை மீட்க அவர்கள் முயற்சித்தனர். இதற்காக கண்மூடித்தனமாக கடந்தகால நடைமுறைகளைப் பின்பற்றாது சுதந்திரமாகச் சிந்திக்க முஸ்லிம் சமூகத்தை தூண்டினர். கல்வியின் இலட்சியம் பற்றி இருவருமே பொதுக் கருத்துடையோராக இருந்தனர். அதனைப் பொதுமக்களுக்கு விளக்குமுகமாக அடிக்கடி எடுத்துக் காட்டினர். எம்.சி.சித்திலெப்பை கல்வியின் இலட்சியம் பற்றிக் குறிப்பிட்டதாவது:

“கல்வி என்பது பாஷைகளை வாசித்தறிவது மாத்திரமல்ல, மனவிரிவுக்கும், தெளிவுக்கும் பலவித அறிவு நூல்களையும் நன்றாயறிவதாம்” முஹம்மது அப்துஹு" கல்வியின் இலட்சியம் பற்றிக் குறிப்பிடும்போது “கல்வி, காலத்தின் தேவையை நிறைவு செய்தல் வேண்டும். வெறுமனே மனனமிடுவதோடு, வாசிப்பதோடு மாத்திரமல்ல கல்வி, சிறந்த சிந்தனையைத் தோற்றுவிக்க வேண்டும்” என சுட்டிக் காட்டியுள்ளார்.

எம்.சி.சித்திலெப்பை இலங்கை முஸ்லிம்களின் போதனாமொழி பற்றி தெளிவான சிந்தனையுடையவராக இருந்தார். இந்நாட்டில் வழக்கத்தில் உள்ள மொழிகளுடன் சமய மொழியான அறபு மொழியையும் கற்க வேண்டும் என்றும் அவர் கருதினார்.

"நமது மார்க்க நூல் அல்குர்ஆன் அறபு மொழியில் இருப்பதால் அறபு மொழியையும், நாம் பேசும் பாஷை தமிழ் அதை அறியாதவன் குருடன் போலாவான் ஆதலால் தமிழையும், ஆட்சி மொழி ஆங்கிலம் ஆதலால் ஆங்கிலத்தையும், இத்தீவில் வாழ்பவர்களுள் பெரும்பான்மையினர் சிங்களம் பேசுவதால் சிங்களத்தையும் படிப்பதவசியம்". என்றார்.

சமயச் சூழலில் முஸ்லிம் மாணவருக்கு ஆங்கில மொழிக் கல்வி வழங்கப்பட வேண்டும் என்ற சிந்தனையை இருவரும் கொண்டிருந்தனர். இதற்காகவே முகம்மது அப்துஹு "அல் வகாயிவு மிஸ்ரியா" என்னும் அரச பத்திரிகையூடாகவும். "அல் உர்வதுல் உஸகா" எனும் சஞ்சிகை ஊடாகவும், எம்.சி. சித்திலெப்பை தனது "முஸ்லிம்நேசன்", "ஞானதீபம்" என்னும் பத்திரிகைகளினூடாகவும் முயற்சித்துள்ளனர். கல்வி பற்றிய கட்டுரைகள், கல்வித் தாபனங்கள் பற்றிய செய்திகள், நவீன கல்விச் சிந்தனைகள் என்பன பற்றிய தகவல்களை இப்பத்திரிகைகள் தாங்கிவந்தன.

சமயக் கல்விக்கும், சமயச் சார்பற்ற கல்விக்கும், பழமைக்கும், புதுமைக்கும், மேற்கினதும், கிழக்கினதும் பாரம்பரியங்களுக்கும் இடையில் நடு நிலையைப் பின்பற்றத் தக்கதான இணக்கம் ஒன்றை ஏற்படுத்தி, இஸ்லாமிய மயமாக்கலை நோக்கி செல்லும் சமூகத்தை உருவாக்க முயற்சிப்பதாகவே இருவரதும் கல்வி முயற்சிகள் இருந்திருப்பதைக் காணமுடிகின்றது. இவ்விருவரதும் சிந்தனைகளிலும், முயற்சிகளிலும் மேற்குறித்தவாறான ஒருமுகப்பாடு இருந்த போதும் அவரவர் வாழ்ந்த சூழலின் வேறுபாடு காரணமாக அவர்களின் இலக்குகளில் சில வேறுபாடு இருந்ததையும் அவதானிக்க முடிகின்றது.

ஐரோப்பியரின் ஆட்சியின் கீழ் இலங்கை முஸ்லிம்கள் முழுமையாகவே கல்வியைப் புறக்கணிக்க நிர்ப்பந்திக்கப்பட்டதால் முஸ்லிம்களுக்கான ஆரம்பப் பாடசாலைகளை ஏற்படுத்த வேண்டிய தேவை இருந்தது. இதனை ஈடு செய்வதற்காக நாட்டின் முக்கிய நகர்களில் ஆண்களுக்காகவும், பெண்களுக்காகவும் ஆரம்பப் பாடசாலைகளை ஏற்படுத்த சித்திலெப்பை முயற்சித்தார். முஸ்லிம்களுக்கான உயர்தரப் பாடசாலைகளை தோற்றுவிப்பதற்கான வளங்களை அன்று முஸ்லிம் சமூகம் கொண்டிருக்கவில்லை.

ஆனால் அப்துஹுவின் எகிப்திய சூழலில் ஆரம்பப் பாடசாலைகள் முதல் உயர் பாடசாலைகளென சகல வளங்களும் காணப்பட்டது. அங்கு காணப்பட்ட குறை நிறைகளை நிவர்த்தி செய்ய ஆரம்ப, இடை, உயர் பாடசாலைகளுக்குப் பொருத்தமான பாடத்திட்டங்களை முன்வைத்த பணியையே அப்துஹுவால் செய்ய முடிந்தது என்பதுவும் நினைவில் கொள்ளத்தக்கதாகும்.

## முஹம்மது அப்துஹு, எம்.சி. சித்திலெப்பை கல்விச் சிந்தனைகள் இலங்கையில் இன்றைய சூழலுக்கான பொருத்தப்பாடு

இலங்கையின் கல்வி வரலாற்றில் காலாகாலம் மாறிவரும் சூழலுக்கு ஏற்ப பல்வேறுபட்ட கல்விச் சீர்திருத்தச் சிந்தனைகள் தோன்றி மறைந்துள்ளதுடன். முஸ்லிம்களின் கல்வி விருத்திக்கு பலரும் அன்று முன்னின்று உழைத்துள்ளனர். எம்.சி. சித்திலெப்பை, டி.பி. ஜாயா, சேர் ராஷிக் பரீத், கலாநிதி பதியுதீன் மஹ்முத், எ.எம்.ஏ. அஸீஸ் போன்றவர்களின் பணிகளும், சிந்தனைகளும் மகத்தானவை

எம்.சி. சித்திலெப்பையின் அன்றைய சூழலுக்கேற்ப பொருத்தமானதாகக் கண்டு முன்வைக்கப்பட்ட கல்விச் சிந்தனைகள் இன்றைய சூழலுக்கும் பொருத்தப்பாடுடையதாக அமைந்து காணப்படுவதால்தான் அவரை "இலங்கை முஸ்லிம் கல்விப் பணி முன்னோடி" என இன்றும் வழங்கப்பட்டு வருகின்றது. அண்மையில் புதிய கல்விச் சீர்திருத்த முயற்சிகள் பரீட்சாத்த நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்டு அதனடியாக இன்று புதிய கல்விச் சிந்தனைகள் பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அன்று அப்துஹுவும், சித்திலெப்பையும் முன்வைத்த கல்விச் சிந்தனைகளை அடியொட்டிய விதமாக இன்று ஏற்படுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் கல்வி நடவடிக்கைகள் அல்லது கல்விப் போக்குகள் அமையப் பெற்றுள்ளமை கண்கூடு

ஏனெனில் இன்று இலங்கையில் அறநெறிப் போதனைகளுடனான கல்வி நடவடிக்கைகளுக்கே கூடிய முக்கியத்துவம் வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. இன்றைய கல்விக் குறிக்கோள்களுள் சமயமும், ஒழுக்கமும் மிக முக்கியமாக கருதப்படுகின்றது. இந்த வகையில் இவ்விருவரினதும் "சமயத்துடனான கல்விப் போதனை" பற்றிய கல்விச் சிந்தனைகள் இன்றைய இலங்கையின் கல்வி நடவடிக்கைகளின் தேவையாக உள்ளது.

இன்று ஆங்கிலக் கல்வியின் அவசியம் பெரிதும் உணரப்பட்டுள்ளது. தொழில்நுட்ப முன்னேற்றம் காரணமாகவும், தொழில்நுட்பக் கருவிகள் ஆங்கில மொழியுடன் தொடர்பானவை என்ற வகையிலும், சர்வதேச தொடர்பாடல் மொழியாக ஆங்கில மொழியே காணப்படுவதாலும்

இன்று அம் மொழியை படிக்க வேண்டியதன் அவசியம் காணப்படுகின்றது. இதன் காரணமாக ஆரம்பக் கல்வி முதல் பல்கலைக்கழகம் மற்றும் உயர் கல்வித் துறை என அனைத்து மட்டங்களிலும் ஆங்கில மொழி கற்பது அவசியப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் தொழில் வாய்ப்புக்களுக்கு கூட ஆங்கில மொழி எதிர்பார்க்கப்படுகின்றது.

எகிப்தில் முஸ்லிம்கள் மீது ஐரோப்பியர் மேலாதிக்கம் கொள்ள தொழில்நுட்ப முன்னேற்றமும், ஆங்கில மொழியுமே துணையாக அமைந்தன. இலங்கையில் முஸ்லிம்கள் அரசியல், பொருளாதார, கல்வி விடயங்களில் வீழ்ச்சியுற காரணமாக அமைந்தது அன்று இந்த ஆங்கில அறிவின்மையே. எனவேதான் இவ்விருவரும் ஆங்கில மொழியின் அவசியத்தை மிகமிக வலியுறுத்தினர். எனவே இன்றைய இலங்கையின் மிக அவசியமானதோர் தேவையாக ஆங்கில அறிவு அமையப் பெற்றுள்ளமை அவ்விருவரது அக்கால கருத்தினடியில் எழுந்த சிந்தனை இன்றும் பொருத்தமாக உள்ளதை உணர்த்துகின்றது.

அன்று அறிஞர் சித்திலெப்பையால் உணர்த்தப்பட்ட ஆங்கில மொழியின் முக்கியத்துவம் இன்று இலங்கைப் பாடசாலைகளில் ஆரம்பக் கல்வியில் 1 -5 வரையான வகுப்புக்களில் செயன்முறையாகவே போதிக்கப்பட வேண்டும் என்ற திட்டத்தையும், உயர்தரப் பரீட்சைக்கு ஆங்கிலத்தை ஓர் கட்டாய பத்திரமாகவும், பல்கலைக்கழக மற்றும் பட்டப் பின் படிப்பின் போதும் ஆங்கில மொழி முக்கியப்படுத்தப்பட்டுள்ளதையும் காணலாம்.

இவ்விருவரது கல்விச்சிந்தனைகளுள் "மாணவர் மையக் கல்வி" இன்று பெரிதும் உணரப்பட்டுள்ளது. அப்துஹு"வின் சிந்தனையான ஏட்டுப் படிப்பை விடவும், மனனமிட்டு மாத்திரம் தலைக்குள் வைத்திருப்பதை விடவும், தொழில் ரீதியாகவும், செயற்பாடுகளுடன் கூடியதாகவும் போதிக்கப்படுவதை அன்று உணர்ந்திருந்தனர். இதனை இன்றைய இலங்கையின் கல்வித் திட்டம் நடைமுறைப்படுத்தி வருவதிலிருந்து அதன் பொருத்தப்பாடு உணரப்படுகின்றது.

இவ்விருவரும் நடைமுறைப்படுத்த முயற்சித்த "அனைவருக்கும் கல்வி" என்ற சிந்தனை, சிறியோர், பெரியோர், ஆண், பெண் அனைவரும் கல்வி கற்க வேண்டும் என்ற சிந்தனை இன்றைய இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

முறைசார் கல்வி, முறைசாராக் கல்வி, முறையில் கல்வி என்ற வகையில் இலங்கையில் கல்வி வழங்கல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை. அவ்விருவரது சிந்தனையின் வெளிப்பாடாகும். இவ்விருவரின் அறநெறியுடனான சமய விழுமியங்கள் சார்ந்த கல்விக் கூடங்களும், அங்கு கற்பிபோர் அவ்வச் சமயத்தை சார்ந்தோராக அமைய வேண்டும் என்ற அவர்களது சிந்தனைகளும் இன்றைய இலங்கை கல்வித் திட்ட நடவடிக்கைகளில் மேற்கொள்ளப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

பெரும்பாலும் இலங்கையில் உள்ள முஸ்லிம் பாடசாலைகளில் முஸ்லிம் ஆசிரியர்கள், அதிபர்கள் நியமிக்கப்படுவதையும், சில பிற மத ஆசிரியர்களும் முஸ்லிம் பாடசாலைகளில் நியமிக்கப்படுவதையும் காண்கின்றோம். முஸ்லிம் பாடசாலைகளில் ஆரம்பக் கல்வி முதல் உயர்தரம், ஏன் பல்கலைக்கழகங்களிலும் சமயம் போதிக்கப்பட்டு வருகின்றது முஹம்மது அப்துஹு", அறிஞர் சித்திலெப்பை இருவரது கல்விச் சிந்தனையின் சாரம்சம் என்னவெனில் - செயற்பாடு ரீதியான கற்பித்தல், சமயம், ஒழுக்கம் சார்ந்த போதனைகள், பாடநூல்கள், பாடப் போதனைகள் நவீன சூழலுக்கேற்ப அமைதல், தொழில் சார் கல்வி நடவடிக்கைகள், ஆங்கில

மொழிக்கான முக்கியத்துவம், சிறந்த சமூகத்தைக் கட்டி எழுப்பும் கல்வி போன்ற நோக்குகளைக் கொண்ட இச் சிந்தனைகள் யாவும் இன்றைய இலங்கைச் சூழலுக்கும் பொருந்தும் விதமாக அமைந்து காணப்படுகின்றமை வெள்ளிடைமலை.

இன்றைய இலங்கையில் கல்விச் சீர்திருத்த பாடசாலைக் கலைத்திட்டம் இவ்விரு அறிஞர்களின் கல்விச் சிந்தனைகளை ஒப்பாக்கும் வகையில் அமையப் பெற்றிருப்பது அச் சிந்தனைகள் இன்றைய இலங்கைச் சூழலுக்கும் பொருத்தமானது என்பதைனை நிறுவி நிற்கிறது. மாத்திரமல்லாது அறபு மொழியின் முக்கியத்துவம் அறபுக் கல்லூரிகளில் சிறப்பாக உணரப்படுவதையும் காணமுடிகிறது. சுமார் ஆறு அல்லது ஏழு வருடங்கள் அறபுக் கல்லூரிகளில் கற்று வெளியேறும் மாணவர்கள் அறபு மொழிப் பரீட்சையம் இல்லாமை உணரப்பட்டு மத்ரஸாக்காளில்அதற்கான முன்னுரிமை வழங்கி வரப்படுகின்றது.

பாடசாலைகளில் கூட இடைநிலை மற்றும் உயர் வகுப்புக்களில் அறபு மொழி போதிக்கப்பட்டு வருவதோடு, க.பொ.த. சாதாரணதரம், க.பொ.த. உயர்தரம் பரீட்சைகளிலும் ஒரு பத்திரமாக மாணவர்களால் எடுக்கப்படுகின்றது. மேலும் பல்கலைக் கழகங்களில் அறபு மொழி விஷேட துறையாகக் கூட போதிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## முடிவுரை:

ஐரோப்பியரின் காலனித்துவத்தின் கெடுபிடிகளில் அகிலமே ஆட்பட்டு அங்கலாய்த்துக் கொண்டிருந்த காலப்பகுதி 19ம் நூற்றாண்டு. இக்கால இஸ்லாமிய உலகைக் கட்டிக் காத்து சீர் திருத்த பல சிந்தனையாளர்களும், சீர்திருத்தவாதிகளும் தோன்றினர். அவர்களது சீர்திருத்த முயற்சிகளும், சிந்தனைகளும், இஸ்லாத்தையும், முஸ்லிம்களையும் காத்தருளியது.

இந்த வகையில் இலங்கையில் அறிஞர் சித்திலெப்பையும், எகிப்தில் முகம்மது அப்துஹுவும் சமூக மேம்பாட்டுக்காக அன்று முன்வைத்த சிந்தனைகளும், சீர் திருத்த முயற்சிகளும் முஸ்லிம்களின் அரசியல், பொருளாதாரம், கலாசாரம், சமயம், கல்வி, எனப் பல துறைகளையும் அவாவி நின்றது.

இவ்விருவரும் சிறந்த கல்விச் சிந்தனை முன்னோடிகள் என்ற வகையில் கல்வித் தேடலுக்குரிய புதிய போக்கை சமூகத்தில் ஏற்படுத்தியவர்கள். இவ்விருவரினதும் சிந்தனைப் போக்குகள் பெரும்பாலும் ஒத்த பண்பைப் பெற்று விளங்குவது சிறப்புக்குரியது. இவ்விருவரினதும் கல்விச் சிந்தனைகள் இலங்கைளில் இன்றைய கல்விச் சூழலுக்கு பொருத்தமாக அமையப் பெறுவது மிகமிக சிறப்பு வாய்ந்ததாகக் காணப்படுகின்றது.

### உசாத்துணைகள்:


1. அமீன் எம்,ஐ.எம். (1997) **இலங்கை முஸ்லிம்களின்** வரலாற்றில் அறிஞர் சித்தி **லெப்பை** அல்ஹஸனாத் பப்ளிகேசன், மாவனல்லை.

2. அனஸ் எம்.எஸ்.எம். **தற்கால இஸ்லமியச் சிந்தனை**, கலாசார ஆய்வு வட்டம், போராதனை பல்கலைக் கழகம்.

3. கமால்தீன் எஸ்.எம். (2001) **இலங்கை கல்விப் பணி** முன்னோடி மூதறிஞர் **சித்திலெப்பை** , ஸ்ரீலங்கா இஸ்லாமிய நிலையம், கொழும்பு.

4. காஸிம் பி.டி.எம். (1995) **எம்.சி.சித்திலெப்பை அவர்களின்** வாழ்க்கை வரலாறு, கொழும்பு.

5. சித்திலெப்பை எம்.சி. (1028) **அஸராருல் ஆலம்.** கொழும்பு.

6. சுக்ரி எம்.ஏ.எம். **அரபி பா்ஷாவும் இலங்கை** முஸ்லிம்களின் அவரது செல்வாக்கும. இஸ்லாமிய சிந்தனை மலர்:14, இதல்-01

7. ஸாஹிர் எம்.சி (1979) நம் **முன்னோர**, கொழும்பு.

8. Osman Ameen (1944) **Mohammad Abduh,** page 195-213

9. Malcolm H.Kerr (1966) **Islamic Reform the political and Legal theories of Mohammed Abduh and Rashid Rila"** , University of california Press.

10. Ali Raheema (1994) **Pioneers of Islamic Revival,** Zed Books Ltd>, london.